**THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**
**O.S.No. 119 /2022**

Deposition of witness **PW1** for Plaintiff and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Muthuraj | Father's Name | : Munideva |
| Age | : | Village | : |

**நாள்:18.12.2024.**

**வாதி முதல் விசாரணை:**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் 1-ம் வாதி வா.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன்.

23.10.2018 ம் தேதியிட் சிட்டா உண்மை நகல் **Ex.A1** ஆகவும்,

09.11.2018 ம் தேதியிட்ட 3-ம் பிரதிவாதி 1,2 பரதிவாதிகள் எழுதிக்கொடுத்த தானபத்திரம் நகல் **Ex.A2** ஆகவும்,

07.04.2022 ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **Ex.A3** ஆகவும்,

பிரதிவாதிகள் கையொப்பம் இட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை(3 எண்ணிக்கை ) அசல் **Ex.A4** ஆகவும்,

26.04.2022 ம் தேதியிட்ட மண் வீடு மற்றும் மாட்டுக்கொட்டகைக்கு சிவில் இன்ஜீனியர் கொடுத்த சொத்து மதிப்பு சான்று அசல் **Ex.A5** ஆகவும்,

04.11.2021 ம் தேதியிட்ட வழிகாட்டி மதிப்பை குறித்து வாதியாககிய எனக்கு பதிவுத்துறை அனுப்பிய கடிதம் அசல் **Ex.A6** ஆகவும்,

02.06.2022 ம் தேதியிட்ட வில்லங்க சான்று (01.01.1975 முதல் 02.06.2022 வரை) சான்றிட்ட நகல் **Ex.A7** ஆகவும்,

குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்க்கு சைட் வேண்டும் என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

நான் சர்வே எண். 282/2 மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

நான் வழக்கு தாக்கல் செய்யதுள்ள சர்வே எண் 2 ஆக சப்டிவிசன் ஆகியுள்ளது என்பது தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

நான் தாவா சொத்தில் உள்ள சர்வே எண் சரியாக போடாமல் தவறான சர்வே எண் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் 4 boundaries ம் தவறாக குறிப்பிட்டு தவறாக தாக்கல் செய்தள்ளேன் என்றால் சரியல்ல.

நான் கூறுகிறேன் இந்த வழக்கின் சர்வே எண்.282/2 எ ஆகும் அது சிக்கமுத்தே கவுடு, கெம்மபகாத்தே கவுடுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

சர்வே எண்.282/2 பி காத்தேகவுடுக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

இந்த சொத்து ஆதியில் காளே கவுடுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

நான் காளே கவுடுவின் பேரன் என்பதை நிருபிக்கும் வண்ம் காளே கவுடுவின் இறப்பு சான்றிதழ் மள்றும் வாரிசு சான்றிதழ் நான் நீதிமனற்ததில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவர் 50 வருடத்தற்கு முன்பு இறந்ததால் நான் தாக்கல் செய்யவில்லை.

நான் எனது தந்தை பெயர் சிக்கமுத்தே கவுடுவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

பிரதிவாதிகள் பொரிய காத்தே கவுடு இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததை நான் தெரிந்து கொண்டேன்.

நான் எனது தந்தையான சிக்கமுத்தே கவுடுவின் அனைத்து வாரிசுகளையும் இந்த வழக்கில் நான் சேர்காததால் Non Joinder of Parties ல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் எனறால் சரியல்ல.

**பிரதிவாதிகள் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்./—திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.